தொழில் நுட்பக் கல்வித் துறை

அனுப்புநர்

ஆணையர்,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை 600 025

பெறுநர்

முதல்வர்கள்
(அனைத்து Add-on-course பயிற்சி அளிக்கும் பாலிடெக்னிக் கல்லூரிகள்)

கடித எண் 22368 /Y3/CDC/2010 நாள் 11.6.2010

ஐயா,

பொருள் தொழில் நுட்பக் கல்வி – Add on-Course-ல் சான்றிதழ் பயிற்சி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்களுக்கு தேர்வு நடத்தி சான்றிதழ் வழங்குவதற்கான நடைமுறை குறித்து..

பார்வை அரசாணை (நிலை) எண் 197, உயர்கல்வி (ஜி) துறை, நாள் 22.6.2009

*******

2007-2008-ம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தபொழுது மாண்புமிகு உயர்கல்வி அமைச்சர் அவர்கள் "கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்" படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய வேலை வாய்ப்பினை பெருக்கிக் கொள்வதற்கு வகை செய்யும் விதத்தில் வேலை வாய்ப்பை அளிப்பதற்கான சான்றிதழ் பயிற்சிகள் கூடுதலாக பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளில் வழங்கப்படும் என அறிவிப்பினை வெளியிட்டார்.

அதனடிப்படையில் தொழில் நுட்பக் கல்வி இயக்குனரகம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு அவர்களின் வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் விதத்தில் 51 சான்றிதழ் பயிற்சிகளை (6 மாதம் மற்றும் 1 வருடம்) அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் சுயநிதி பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளில் வழங்க முடிவு செய்யப்பட்டது. அப்பயிற்சிகளின் பாடத் திட்டம் மற்றும் விதிமுறைகள் வல்லுநர் குழுவால் வடிவமைக்கப்பட்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு, பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளில் தேர்ந்த ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் ஒரே காலகட்டத்தில் எல்லா பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளில் ஆரம்பிக்கப்படாமல் வெவ்வேறு காலக்கட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. ஒரே பலவகை தொழில் நுட்ப கல்லூரியில் கூட நடத்தப்பட்ட பல்வேறு சான்றிதழ் பயிற்சிகள் (Add on Course) வெவ்வேறு காலக் கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு முழுமையடைந்துள்ளது.

மேலும், தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அந்தந்த பகுதிகளின் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு பெற்றுள்ளபடியால் அவர்களின் பட்டப் படிப்பு தேர்வுகள் ஒரே சமயத்தில் நடைபெற வாய்ப்புகள் இல்லை. எனவே Add on course சான்றிதழ் பயிற்சிகளின் தேர்வுகள் அவர்களின் பட்டப் படிப்புகளுக்கு குந்தகம் விளைவிக்காதபடி பல்வேறு தினங்களில் நடத்த வேண்டியது இன்றியமையாததாக உள்ளது.

ஆகவே, மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக Add on course சான்றிதழ் பயிற்சிகளின் தேர்வுகளை அந்தந்த பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளே தேர்ந்த தேர்வாளர்களைக் கொண்டு நடத்துவது சாலச் சிறந்ததாகும் என கருதப்படுகின்றது.

Add on course சான்றிதழ் பயிற்சிகளுக்கான தேர்வு வினாத்தாள்கள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரகம் இணைய தளத்தில் (Add on Technical Course) வெளியிட்டுள்ள விதிமுறைகளின்படி, தேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு தயாரித்து, வாரியத் தேர்வுகளின் நடைமுறை விதிகளின்படி எவ்வித

மாற்றமும் செய்யாமல், நம்பகத் தன்மைக்கு குந்தகம் ஏற்படாதவண்ணம் Add on course விதிமுறைகளின்படி பயிற்சி நிறைவு செய்த தகுதியான மாணவர்களுக்கு தேர்வு நடத்திடுவதற்கு அந்தந்த பலவகை தொழில் நுட்ப கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கருத்தியல் (Theory) தேர்விற்கான வினாத்தாள்கள் அந்தந்த Add on course பாடத்திட்டம் மற்றும் விதிமுறைகளின்படி (இயக்கக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது) தெரிவிக்கப்பட்டுள்ள முறையில் (same pattern) தேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு தயார் செய்து நேர்மையான முறையில், பயிற்சி நிறைவு செய்த தகுதியான மாணவர்களுக்கு தேர்வினை நடத்தி தேர்வு முடிவுகள் வெளியிட அந்தந்த பலவகை தொழில் நுட்ப கல்லூரி முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். மேலும் செய்முறை பயிற்சி தேர்வுகளும் Add on course பாடத்திட்டம் மற்றும் விதிமுறைகளின்படி பயிற்சி நிறைவு செய்த தகுதியான மாணவர்களுக்கு தேர்வு வாரிய நடைமுறைகளின்படி நேர்மையான முறையில் உரிய வல்லுநர்களைக் கொண்டு நடத்திடவும் அந்தந்த கல்லூரி முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேர்வு மற்றும் சான்றிதழ் கட்டணங்களை அரசாணை எண் 197–ன்படி அந்தந்த பலவகை தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர்கள் பயிற்சி நிறைவு செய்த தகுதியான மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

Add on course பயிற்சி நிறைவு செய்த தகுதியான கலை மற்றும் அறிவியல் மாணவர்களுக்கு வினாத்தாள்கள், கருத்தியல் மற்றும் செய்முறை பயிற்சி தேர்வுகள் தேர்வு வாரியத்தின் நம்பகத் தன்மைக்கு எவ்வித ஊறும்விளையாவண்ணம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடத்தி தேர்வு முடிவுகள் வெளியிட்டு சான்றிதழ் வழங்குவதற்கு அந்தந்த பலவகை தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர்கள் மீண்டும் அறிவுறுத்தப்படுகின்றார்கள். மேலும் சான்றிதழின் மாதிரிப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தேர்வில் தகுதி மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவர்களின் கீழ்க்கண்ட முழு விவரங்களுடன் கூடுதல் இயக்குநர் (தேர்வு), தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை 600 025 என்ற முகவரிக்கு இரு நகல்களில் தவறாது கல்லூரி முதல்வர்கள் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

1. பலவகை தொழில் நுட்பக் கல்லூரியின் பெயர் மற்றும் Code No.
2. பயிற்சியின் பெயர் மற்றும் விவரம்
3. பயிற்சி நிறைவு செய்த தகுதியான மாணவர்களின் பெயர் மற்றும் முழு விவரம்
4. தேர்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களின் பெயர் மற்றும் முழு விவரம்
5, கருத்தியல் மற்றும் செய்முறைத் தேர்வுகளில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் (Max: 100 and obtained )
6. தேர்ச்சி பெற்ற மாணவர்களின் பெயர் மற்றும் விவரம்
7. சான்றிதழ் பெற்றுக் கொண்ட மாணவர்களின் பெயர் மற்றும் அவர்களின் ஒப்புகை கையொப்பமிட்ட படிவம் (in advance)
8. மாணவர்களின் Feedback தனித்தனியே

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை உடன் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

11/6/10

தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்காக

<u>இணைப்பு:</u> மாதிரி சான்றிதழ் படிவம் (இதில் குறிப்பிட்டபடியே சான்றிதழ் தயார் செய்து மாணவர்களின் விவரங்கள் முழுவதும் பூர்த்தி செய்து முதல்வரின் கையொப்பத்துடன் இயக்ககத்திற்கு அனுப்பி 'Y' பிரிவு மூலமாக Chairman, Board of Examination அவர்களின் கையொப்பம் பெற முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Register No.:

Sl. No.

# DIRECTORATE OF TECHNICAL EDUCATION

GOVERNMENT OF TAMIL NADU

GUINDY, CHENNAI – 600 025

ADD ON TECHNICAL COURSE PROGRAMME

## CERTIFICATE OF ACHIEVEMENT

Awarded to

..........................................................................

in recognition of having successfully completed the

Add on Technical Course on ....................................

from............................ to ....................................

Conducted at

..................................................................................................

...............................................................................

Principal

Chairman
Board of Examinations